உயிரி - தாவரவியல் முக்கிய வினாக்கள்

## ஆஞ்சியோஸ்பெர்ம் வகைப்பாடு

01. கரோலஸ் லின்னேயஸ் எழுதிய நூல் --- ஸ்பீசிஸ் பிளான்டேரம்
02. செயற்கை முறை வகைப்பாட்டை உருவாக்கியவர் --- கரோலஸ் லின்னேயஸ்
03. செயற்கை முறை வகைப்பாட்டின் மற்றொரு பெயர் --- இனப்பெருக்க வகைப்பாடு
04. இயற்கை முறை வகைப்பாட்டை உருவாக்கியவர்கள் -- பெந்தம் மற்றும் ஹுக்கர்
05. மரபு வழி வகைப்பாட்டை உருவாக்கியவர்கள் ---- அடால்ப் எங்ளர் மற்றும் கார்ல் பிராண்டல்
06. பரிசோதனை வகைப்பாட்டியலை உருவாக்கியவர்கள் --- கேம்ப் மற்றும் கில்லி
07. இருசொற் பெயரிடுமுறையை அறிமுகப்படுத்தியவர் --- காஸ்பர்டு பாஹின்
08. இருசொற் பெயரிடுமுறையை நடைமுறைப்படுத்தியவர் ---- கரோலஸ் லின்னேயஸ்
09. இருசொற் பெயரிடுமுறை எந்த நூலில் முதன்முதலில் பயன்படுத்தப்பட்டது --- ஸ்பீசிஸ் பிளாண்டேரம்
10. தற்போதைய அகில உலக தாவரவியல் பெயர் சூட்டு சட்டம் நடைமுறைக்கு வந்த ஆண்டு – 1978
11. ஹெர்பேரிய தாளின் அளவு --- 41செ.மீ நீளம், 29 செ.மீ அகலம்
12. அதிக உலர் தாவர மாதிரி எங்கு உள்ளது -- அரச தாவரவியல் தோட்டம், ஹியூ, லண்டன்

## பெந்தம், ஹுக்கர் வகைப்பாடு.

01. ஜெனிரா பிளாண்டேரம் நூல் ---- 3 தொகுதி – 97205 சிற்றினம் - 202 துறைகள் உள்ளடக்கியது.
02. தற்கால துறைகள் பெந்தம் ஹுக்கர் காலத்தில் எவ்வாறு அழைக்கப்பட்டது ------ கோஹார்டுகள்
03. தற்கால குடும்பம் பெந்தம் ஹுக்கர் காலத்தில் எவ்வாறு அழைக்கப்பட்டது --- துறைகள்
04. ஆஞ்சியோஸ்பெர்ம்களில் எளிய,தொன்மையான தாவரங்கள்எத்துறையில் இடம்பெற்றிருந்தது – ரானேல்ஸ்

## மால்வேசி :

01. மால்வேசி குடும்பத்தாவரத்தில் காணப்படும் வழவழப்பான திரவம் --- மியூசிலேஜ்
02. நட்சத்திர வடிவ ரோம வளரிகள் காணப்படுவது --- மால்வேசி
03. பூக்காம்பு செதில் அற்ற தாவரம் --- அபுட்டிலான் இண்டிகம் ( துத்தி )
04. ஓரறை மகரந்தப்பை – சிறுநீரக வடிவம்
05. எகிப்து பருத்தி எனப்படுவது -- காஸிப்பியம் பார்படென்ஸ்
06. அமெரிக்க பருத்தி எனப்படுவது --- காஸிப்பியம் ஹிர்சூட்டம்
07. டெக்கான் பருத்தி என அழைக்கப்படுவது --- ஹைபிஸ்கஸ் கென்னாபினஸ் ( பாஸ்ட் நார் )
08. ஹோலி ஹாக் என அழைக்கப்படுவது -- ஆல்தியா ரோசியா

## சொலானேசி

01. நடுநரம்பு மற்றும் பக்கநரம்புகளில் மஞ்சள்நிறமுட்கள் காணப்படும் தாவரம் --- சொலானம் சாந்தோகார்பம்
02. நிலைத்த புல்லி வட்டம் காணப்படுவது -- சொ. மெலாஞ்சினா ( கத்தரி )
03. அட்ரோபா பெல்லடோனா -- அட்ரோ.்.பின் ( ஆல்கலாய்டு ) – தசை வலிக்கு மருந்தாக பயன்படுகிறது.
04. டா.ஸ்ட்ராமோனியம் - ஸ்ட்ராமோனியம் - ஆஸ்துமா மற்றும் கக்குவான் இருமலுக்கு மருந்தாக
05. சொ.ட்ரைலோபேட்டம் -- ( தூதுவளை ) --- இருமலுக்கு மருந்தாக
06. வைத்தானியா சாம்னி.்.பெரா --- நரம்பு தளர்ச்சியை நீக்க மற்றும் சிறுநீர் போக்கை தூண்ட
07. நிக்கோட்டியானா டொபாக்கத்தில் உள்ளஆல்கலாய்டுகள் -- நிக்கோட்டின், நார்நிக்கோட்டின், அனபைசின்
08. செஸ்டர்ம் டையூர்னம் எனப்படுவது --- பகல் மல்லி
09. செஸ்டர்ம் நாக்டர்னம் எனப்படுவது --- இரவு மல்லி

## யூ.்.போர்பியேசி :

01. தண்டு ஒளிச்சேர்க்கை செய்வது ---- கிளாடோடு உ.ம். யூ. திருக்கள்ளி, யூ. ஆண்டிகோரம்(சதுர கள்ளி)
02. யூ.்.போர்பியேசி தாவரங்களில் காணப்படும் திரவம் -- லேட்டக்ஸ்
03. இலையடிச் செதில் ரோமச் சுரப்பியாக உருமாற்றம் அடைந்திருப்பது – ஜாட்ரோபா குர்காஸ்
04. சிறப்பு மஞ்சரி ----- சையாத்தியம் ( யூ. பல்செரிமா )
05. பானிக்கிள் மஞ்சரி --- ரிசினஸ் கம்யூனிஸ்
06. கேட்கின் மஞ்சரி -- அகாலிபா இண்டிகா
07. வயிற்றுப்போக்கை தூண்ட மற்றும் பையோ டீசலாக பயன்படுவது --- ஜா. குர்காஸ் ( காட்டாமணக்கு )
08. மஞ்சள் காமாலைக்கு மருந்தாக பயன்படுவது -- பி. அமாரஸ் ( கீழா நெல்லி )
09. பாம்புகடி மற்றும் தொழு நோய்க்கு மருந்தாக பயன்படுவது – ஜா. காஸிப்.்.போலியா
10. பாரா ரப்பர் எனப்படுவது -- ஹீவியா பிரேசிலியன்சிஸ்.

## மியூசேசி :

01. தரையடி தண்டு இவ்வாறு அழைக்கப்படுகிறது --- ரைசோம்
02. பயணிகள் பனை என அழைக்கப்படுவது --- ராவனெலா மடகாஸ்கரியன்சிஸ்
03. மியூசாவில் உண்மையான தண்டு – தரையடி ரைசோம்
04. மியூசா ஒரு மானோகார்பிக்( வாழ்நாளில் ஒருமுறை மட்டும் மலர்ந்து கனி கொடுக்கும்) பல்லாண்டுதாவரம்
05. மியூசாவில் காணப்படும் மஞ்சரி -- கிளைத்த ஸ்பாடிக்ஸ்
06. ராவனெலாவின் மஞ்சரி -- கூட்டு சைம்
07. மியூசா ஒரு பாலிகேமஸ் ( ஆண் மலர், பெண் மலர் மற்றும் இருபால் மலர் உள்ளதால் ) தாவரம்.
08. மியூசாவில் 5 மகரந்தாள்கள் மட்டும் வளமானவை

09. ராவனெலாவில் 6 மகரந்ததாள்களும் வளமானவை.
10. மியூசாவின் கனி : விதைகளற்ற பெர்ரி ராவனெலா : வெடி கனி
11. மியூசா சைனன்சிஸ் -- குட்டை நேந்திர வாழை
12. மணிலா நார் தாவரம் எனப்படுவது -- மியூசா டெக்ஸ்டைலிஸ் -- அபாகா துணி –
13. பறவைகளின் சொர்க்க மலர் எனப்படுவது --- ஸ்டெரிலிட்சியா ரெஜினே
14. மியூசா தாவரத்தின் இலையமைவு -- சுழல் முறை

## தாவர உள்ளமைப்பியல் :

01. காற்று நிரம்பியுள்ள பாரன்கைமா திசு --- ஏரன்கைமா ( உ.ம். நிம்ஃபயா )
02. நட்சத்திர வடிவ பாரன்கைமா --- ஸ்டெல்லேட் பாரன்கைமா ( உ.ம். வாழை, கல்வாழை - இலைகாம்பு)
03. பசுங்கணிகங்களுடன் உள்ள பாரன்கைமா – குளோரன்கைமா
04. தாவரத்தின் தளத்திசு எதனால் ஆனாது --- பாரன்கைமா
05. உயிருள்ள திசுக்கள் எவை --- பாரன்கைமா, கோலன்கைமா ( காரணம் : செல்லில் புரோட்டோபிளாஸ்ட் உள்ளதால் )
06. அடுக்கு கோலன்கைமா காணப்படுவது --- ஹீலியான்தஸ்
07. கோண கோலன்கைமா காணப்படுவது --- டாட்ூரா, நிக்கோட்டியானா
08. இடைவெளி கோலன்கைமா காணப்படுவது -- ஐப்போமியா
09. தாவர திசுவிற்கு வலிமை தருவது --- கோலன்கைமா
10. தாவரங்களில் காணப்படும் உயிரற்ற திசு --- ஸ்கீளிரன்கைமா
11. விதையுறையின் கடினத்தன்மைக்கு காரணம் --- ஸ்கீளிரைடுகள்
12. பிரேக்கி ஸ்கீளிரைடுகள் எவ்வாறு அழைக்கப்படுகிறது – கல் செல்கள் (பேரிக்கனியின் தளத்திசுவில் உள்ளது
13. மேக்ரோ ஸ்கீளிரைடுகள் --- கோல் செல்கள் -- விதை வெளி உறைகளில் காணப்படும்.
14. ஆஸ்டியோ ஸ்கீளிரைடுகள் -- எலும்பு செல்கள் -- பட்டாணியின் விதை உறைகளில் காணப்படும்.
15. புரோகேம்பியத்திலிருந்து உருவாகும் சைலம் --- முதல்நிலை சைலம்
16. வாஸ்குலார் கேம்பியத்திலிருந்து உருவாகும் சைலம் -- இரண்டாம்நிலை சைலம்
17. முதலில் உருவாகும் சைலம் --- புரோட்டோசைலம்
18. இரண்டாவதாக உருவாகும் சைலம் -- மெட்டாசைலம்
19. சைலத்தில் காணப்படும் செல்கள் --- டிரக்கீடுகள், சைலக்குழாய், சைலம் நார், சைலம் பாரன்கைமா
20. ஜிம்னோஸ்பெர்ம், டெரிடோபைட்டுகளில் நீரை கடத்தும்கூறு --- டிரக்கீடுகள்
21. ஆஞ்சியோஸ்பெர்ம்களில் நீரை கடத்தும் கூறு -- சைலக் குழாய்கள்
22. சைலக்குழாய்கள் ஜிம்னோஸ்பெர்ம், டெரிடோபைட்டுகளில் காணப்படுவதில்லை. விதிவிலக்கு நீட்டம் எனப்படும் ஜிம்னோஸ்பெர்மில் சைலக்குழாய்கள் உள்ளன.
23. சைலம் நார்கள் எவ்வாறு அழைக்கப்படுகிறது --- லிப்ரிஃபார்ம் நார்கள்
24. புளோயத்தில் காணப்படும்செல்கள்---சல்லடைகுழாய்,துணைசெல்கள், புளோயம்நார், புளோயம்பாரன்கைமா
25. துணை செல்கள் மற்றும் சல்லடை குழாய்கள் --- ஆஞ்சியோஸ்பெர்ம்களில் மட்டும் காணப்படும்
26. சல்லடை செல்கள் --- ஜிம்னோஸ்பெர்ம் மற்றும் டெரிடோஃபைட்டாவில் காணப்படும்.
27. புளோயம் பாரன்கைமா - ஒரு வித்திலை தாவரங்களில் காணப்படுவதில்லை
28. புளோயம் நார்கள் இவ்வாறு அழைக்கப்படுகிறது --- பாஸ்ட் நார்கள்
29. பக்க வேர்கள் எதிலிருந்து தோன்றுகிறது --- பெரிசைக்கிள்
30. வேரின் வெளி அடுக்கு --- ரைசோடெர்மிஸ் ( எப்பிபிளாமா )
31. வேரின் ரைசோடெர்மிஸ் எந்த செல்களால் ஆனது -- பாரன்கைமா
32. தண்டின் ஹைப்போடெர்மிஸ்(புறத்தோலடித்தோல்) எதனால் ஆனாது --- ஸ்கீளிரன்கைமா
33. புரோட்டோசைல இடைவெளி காணப்படுவது --- ஒரு வித்திலை தாவர தண்டு
34. கற்றை தொப்பி இவ்வாறு அழைக்கப்படுகிறது --- வன்மையான பாஸ்ட் ( இருவித்திலை தாவர தண்டில் காணப்படுகிறது)
35. புறணியின் கடைசி அடுக்கு --- அகத்தோல்
36. வாஸ்குலார் கற்றை பித்தை சூழ்ந்து வளையமாக காணப்படுவது – யூஸ்டீல்
37. அகத்தோலுக்கு உட்புறமாக அமைந்த தண்டின் மையப்பகுதி --- ஸ்டீல்
38. வேர்தூவிகள் எதிலிருந்து தோன்றுகிறது --- டிரைக்கோபிளாஸ்ட்
39. கற்றை உறை அல்லது எல்லைப் பாரன்கைமா எதில் காணப்படுகிறது -- இருவித்திலை தாவர இலை
40. இருபக்கமும் ஒத்த அமைப்புடைய இலை காணப்படுவது --- புல்
41. இலையில் காணப்படுகின்ற வாஸ்குலார் கற்றை -- ஒருங்கமைந்தவை, மூடியவை
42. மேல்,கீழ் வேறுபாடு உடைய இலைகள் காணப்படுவது --- சூரியகாந்தி

## செல் உயிரியல் மற்றும் மரபியல் :

01. குரோமோசோம் என்ற பெயரை அறிமுகப்படுத்தியவர் -- வால்டேயர் ( 1888 )
02. குரோமோசோம்கள் ஜீன்களை கொண்டுள்ளது என உறுதிபடுத்தியவர் -- பிரிட்ஜஸ் (1916)
03. குரோமோசோமின் நுனிப்பகுதி இவ்வாறு அழைக்கப்படுகிறது – டீலொமியர்
04. டிரோசோபில்லா உமிழ்நீர்சுரப்பியில் பாலிடீன்குரோமோசோம்களை கண்டறிந்தவர் - C.G.பால்பியானி 1881
05. சாலமண்டர் ஊசைட்டில் விளக்கு தூரிகை குரோமோசோம்களை கண்டறிந்தவர் - ஃபிளம்மிங் 1882
06. ஜீன் என்ற சொல்லை அறிமுகப்படுத்தியவர் -- ஜோஹான்சன் -- 1909
07. ஒரு ஜீன் ஒரு நொதி கோட்பாட்டை உருவாக்கியவர்கள் -- பீடில் மற்றும் டாட்டம்
08. மனித ஜீனோம் அளவு --- $3.2 \times 10^9$ நியூக்ளியோடைடுகளை கொண்டுள்ளது.
09. இணைப்பு சோதனை கலப்பு விகிதம் ----- 7 : 1 : 1 : 7
10. விலகல் சோதனை கலப்பு விகிதம் ------ 1 : 7 : 7 : 1

11. குறுக்கேற்றம் எப்போது நிகழ்கிறது -- குன்றல்பிரிவின் புரோபேஸ் - 1ல் பாக்கீடீன் நிலையில்
12. திடீர்மாற்றம் என்ற சொல்லை பயன்படுத்தியவர் -- ஹீயூகோ டீவிரிஸ்
13. முதன்முதலில் திடீர்மாற்றம் எந்த தாவரத்தில் கண்டறியப்பட்டது – ஈனோதீரா லாமார்க்கியானா
14. திடீர்மாற்றத்தை ஸ்போர்ட்ஸ் (இயற்கையின் விளையாட்டு) என கூறியவர் -- சார்லஸ் டார்வின்
15. ஜீனின் செயல்பாட்டு அலகு -- சிஸ்ட்ரான்
16. ஜீனின் மறுசேர்க்கை அலகு – ரெக்கான்
17. ஜீனின் திடீர்மாற்ற அலகு --- மியூட்டான்
18. மனிதனின் 17வது குரோமோசோம் --- அக்ரோசென்ட்ரிக்
19. சிம்பன்சியின் 17வது குரோமோசோம் -- மெட்டா சென்ட்ரிக்
20. **2n – 1 :** மானோசோமி, **2n – 2 :** நல்லிசோமி, **2n + 1 :** டிரைசோமி, **2n + 2 :** டெட்ராசோமி
21. பாக்டீரியா இயல்பு மாற்றத்தை கண்டறிந்தவர் -- பிரடெரிக் கிரி∴பித்
22. நைட்ரஜன் காரம் ---

| பியூரின் | பைரிமிடின் |
|---|---|
| அடினைன் | தைமின் |
| குவானைன் | சைட்டோசின் |

23. ஆர்.என்.ஏ.வில் தைமினுக்கு பதிலாக யூராசில் உள்ளது.
24. நியூக்ளியோசைடு என்பது --- சர்க்கரை, நைட்ரஜன் காரம் சேர்ந்தது.
25. நியூக்ளியோடைடு என்பது --- சர்க்கரை, நைட்ரஜன் காரம் மற்றும் பாஸ்பேட் சேர்ந்தது.
26. டி.என்.ஏ மூலக்கூறு விட்டம் --- 20 $A^0$
27. ஒரு சுற்றில் உள்ள நியூக்ளியோடைடுகள் எண்ணிக்கை – 10
28. இரண்டு நியூக்ளியோடைடுகளுக்கு இடையேயுள்ள தூரம் --- 3.4$A^0$
29. எ.கோலையில் டி.என்.ஏ இரட்டிப்பாதல் நடைபெறும் நேரம் -- 40 நிமிடத்திற்குள்
30. டி.என்.ஏ. சுருளை பிரிக்க உதவும் நொதி -- ஹெலிக்கேஸ்
31. அதிக சுருள் உள்ள பகுதியை தளர்த்தி விடும் நொதி -- டோபோஜசோமெரேஸ்
32. மொத்த ஆர்.என்.ஏ.வில்

**mRNA --- 3 – 5 %**
**tRNA --- 15%**
**rRNA ---- 40 – 60%**

33. **tRNA**வின் குளாவர் இலை வடிவ மாதிரியை உருவாக்கியவர் -- **R.W.**ஹோலி
34. இரத்த வெள்ளை அணுக்கள் பெருக்கத்தை தூண்டுவது -- இன்டர்லியூக்கின்

## தாவர திசு வளர்ப்பு தொழில் நுட்பம்

01. இரத்த அழுத்தத்தை குறைப்பது --- ரெனின் தடுப்பான்கள்
02. மரபொறியியல் பாக்டீரியம் -- உருவாக்கியவர் -- ஆனந்த் சக்கரவர்த்தி -- சூடோமோனாஸ் பூடிடா
03. தாவர திசு வளர்ப்பு தொழில்நுட்பத்தில் அடைகாத்தல் வெப்பம் -- **26$^0$c + 2$^0$C**
04. தாவர திசு வளர்ப்புக்கு தேவைப்படும் ஒளிச்செறிவு -- 2000 – 4000 லக்ஸ்
05. கேலசிலிருந்து தண்டு தோன்றுவது -- காலோஜெனிசிஸ்
06. கேலசிலிருந்து வேர் தோன்றுவது -- ரைசோஜெனிசிஸ்
07. மரபு ரீதியாக மாற்றியமைக்கப்பட்ட டி.என்.ஏ துண்டங்கள் -- மறுசேர்க்கை டி.என்.ஏ
08. கத்தரிக்கும் நொதி எனப்படுவது -- ரெஸ்ட்ரிக்சன் எண்டோநியூக்ளியேஸ்
09. டி.என்.ஏ துண்டுகளை இணைக்க உதவும் நொதி --- லைகேஸ்
10. ஒரே முன்னோரிடமிருந்து உருவாகிய மரபு ஒப்புமை உடைய உயிரிகள் --- குளோன்கள்
11. பாக்டீரியங்களில் உள்ள வட்ட வடிவ டி.என்.ஏ இவ்வாறு அழைக்கப்படுகிறது -- பிளாஸ்மிட்
12. நோய் எதிர்ப்பு திறனை பெற்ற இரத்த வெள்ளை அணுக்களின் பெருக்கத்தை தூண்டுவது - இன்டர்லியூக்கின்
13. ரெஸ்டிரிக்சன் நொதி இவற்றால் மட்டும் உற்பத்தி செய்யப்படுகிறது -- பாக்டீரியங்கள் மட்டும்
14. ஒவ்வொரு ரெஸ்டிரிக்சன் நொதியும் டி.என்.ஏ மூலக்கூற்றை இந்த இடத்தில் துண்டிக்கிறது --- நியூக்ளியோடைடு வரிசையில்
15. தக்காளி கனி சேதமடைவதற்கு காரணமான நொதி -- பாலிகேலக்ட்ரோனேஸ்
16. அக்ரோபாக்டீரியம் டியூமிபேசியன்ஸ் எனும் பாக்டீரியம் மூலம் உண்டாகும் நோய் -- மகுட கழலை
17. **Ti** பிளாஸ்மிட்டை பெற்றிருக்கும் மண்வாழ் பாக்டீரியம் -- அக்ரோபாக்டீரியம் டியூமிபேசியன்ஸ்
18. வேரில் கிழங்கையும், கிளைகளில் தக்காளியையும் கொடுக்கும் தாவரம் -- பொமாட்டோ
19. ஏறக்குறைய இன்றைய நிலையில் காணப்படும் அயல்ஜீனை பெற்ற தாவரங்கள் எண்ணிக்கை – 50
20. பூச்சிகளை கொல்லும் நச்சு தன்மை உடைய டெல்டா எண்டோடாக்சின் புரதத்தினை உற்பத்தி செய்வுத ---- பேசில்லஸ் துரிஞ்சியன்சிஸ்

## ஒளிச்சேர்க்கை

01. பசுங்கணிகத்தில் உள்ள கிரானாக்கள் எண்ணிக்கை -- 40 – 60
02. ஒளிச்சேர்க்கை நிறமிகள் -- பச்சையம் **a.** பச்சையம் **b,** கரோடினாய்டுகள், சாந்தோ∴பில்கள், ∴பைக்கோபிலின்கள்
03. பச்சைய உருவாக்கத்திற்கு தேவைப்படும் முக்கியப் பொருள் -- **Mg.** (மெக்னீசியம்)
04. துணை நிறமிகள் -- பச்சையம் ஏ. தவிர்த்த பிற நிறமிகள் துணை நிறமிகள் எனப்படும்.
05. ஒளிச்சேர்க்கை நிறமி எங்கு காணப்படுகிறது – கிரானாக்களில்
06. ஒளித்தொகுப்பில் எத்தனை நிறமிகள் காணப்படுகிறது – 250 முதல் 400 நிறமி மூலக்கூறுகள்

07. ஒளித்தொகுப்பு 1. **PSI ---** துணை நிறமி குறைவு, முதன்மை நிறமி அதிகம்
08. ஒளித்தொகுப்பு **II. PS II --** துணை நிறமி அதிகம், முதன்மை நிறமி குறைவு.
09. எலக்ட்ரான் கடத்தி அமைப்பின் வரிசை : **PQ – cyt – $b_6$, cyt – f, PC.**
10. **$C_3$** தாவரங்களுக்கு எடுத்துக்காட்டு – நெல், கோதுமை, உருளை
11. **$C_4$** தாவரங்களுக்கு எடுத்துக்காட்டு – கரும்பு, மக்காச்சோளம், டிரிபுலஸ், அமரான்தஸ்
12. ஒளிச்சுவாசம் நடைபெறும் செல் உறுப்புகள் -- பசுங்கணிகம், பெராக்ஸிசோம்கள், மைட்டோகாண்ட்ரியா
13. ஒளிச்சேர்க்கையை தூண்டும் அலைநீளம் -- 400**nm -- 700 nm**
14. மட்குண்ணி தாவரங்களுக்கு எ.கா. -- மானோட்ரோபா ( ஆஞ்சியோஸ்பெர்ம் )
15. பகுதி ஒட்டுண்ணி தாவரம் -- விஸ்கம்
16. முழு ஒட்டுண்ணி தாவரம் -- கஸ்குட்டா
17. பூச்சி உண்ணும் தாவரம் -- ட்ரஸீரா
18. நைட்ரசோமோனாஸ் ---- அம்மோனியாவை, நைட்ரைட்டாக மாற்றும்

## சுவாசித்தல் :

01. செல்லின் ஆற்றல் நாணயம் --- மைட்டோகாண்ட்ரியா
02. ஏ.டி.பி.யில் எத்தனை மிகை ஆற்றல் பிணைப்பு உள்ளது --- 2
03. குளுக்கோஸ் ஆக்சிஜனேற்றத்தின் நிலைகள்
---- கிளைக்காலிசிஸ்
---- பைருவிக் அமில ஆக்சிஜனேற்றம்
---- கிரெப் சுழற்சி
---- எலக்ட்ரான் கடத்து சங்கிலி
04. கிளைக்காலிசிஸ் கண்டறிந்தவர்கள் -- எம்டன், மேயர்ஹாப் மற்றும் பர்னாஸ் **(EMP)**
05. கிளைகாலிசிஸில் தளப்பொருள் பாஸ்பரிகரணம் எப்பொழுது நடைபெறுகிறது
1,3 பிஸ்பாஸ்போ கிளிசரிக் அமிலம் --- 3 பாஸ்போகிளிசரிக் அமிலம்
06. கிளைக்காலிசிஸ் முடிவில் கிடைக்கும் ஆற்றல்
**$2NADH_2$, $2FADH_2$, 4 ATP**
இதில் 2 ஏ.டி.பி. போக நிகர லாபம் 8 ஏ.டி.பி
07. பைருவிக் அமிலம் காற்றற்ற சூழலில் எவ்வாறு ஒடுக்கமடைகிறது ---
லாக்டிக் அமிலம் (அ) எத்தில் ஆல்கஹால்
08. கிரெப் சுழற்சியை கண்டறிந்தவர் --- சர் ஹேன்ஸ் அடால்.ஃப் கிரப்ஸ்
09. கிரெப் சுழற்சியின் முடிவில் கிடைக்கும் ஆற்றல் -- **$6NADH_2$, 2 $FADH_2$, 2 ATP --- 24 ATP.**
10. கிரெப் சுழற்சியில் தளப்பொருள் பாஸ்பரிகரணம் எப்பொழுது நடைபெறுகிறது
சக்சினைல் **COA ---** சக்சினிக் அமிலம்
11. கிரெப் சுழற்சி ஏன் ஆ.ஃம்பிபோலிக் எனப்படுகிறது -- இச்சுழற்சியில் சில மூலக்கூறுகள் கட்டப்படுகிறது
சில மூலக்கூறுகள் சிதைக்கப்படுவதால்
12. எலக்ட்ரான் கடத்து சங்கிலியில் உள்ள எலக்ட்ரான் ஏற்பிகள் -
**NAD, FAD, coQ, cyt-b, cyt-c, cyt-a, cyt – $a_3$**
13. பென்டோஸ் பாஸ்பேட் வழித்தடத்தை கண்டறிந்தவர் --- டிக்கன்ஸ்
14. பென்டோஸ் பாஸ்பேட் வழித்தடம் எங்கு மட்டும் நடைபெறும் -- சைட்டோபிளாசம்
15. ஒளிச்சுவாசத்தின்போது இரண்டு கிளைசீன் மூலக்கூறுகள் இணைந்து சீரைன் உருவாகும் நிகழ்ச்சி நடைபெறும் உறுப்பு --- மைட்டோகாண்ட்ரியா
16. ஹேட் - ஸ்லாக் வழித்தடத்தில் கற்றை உறை செல்களில் நுழையும் 4 கார்பன் கூட்டுப்பொருள் -
மாலிக் அமிலம்
17. **$C_3$** வழித்தடத்தின் உகந்த வெப்பநிலை -- **$20^0c$ - $25^0c$**

## தாவர வளர்ச்சி :

01. தாவர வளர்ச்சி பொருட்கள் 3 வகைப்படும்.
அவையாவன 1. வளர்ச்சி ஒழுங்குபடுத்திகள் : வளர்ச்சியை ஊக்குவிக்கும் அல்லது நிறுத்தும்
உ.ம் : நாப்தலீன் அசிட்டிக் அமிலம் **( NAA )**
2. தாவர ஹார்மோன் : தாவரத்திலிருந்தது உற்பத்தி செய்யப்படுகின்ற புற மற்றும் உயிர் வேதி மாற்றங்களை தூண்டக்கூடியது.
உ.ம் : ஆக்சின்கள், ஜிப்ரலின்கள்,சைட்டோகைனின்கள், எத்திலின், அப்சிசிக் அமிலம்
3. வளர்ச்சி அடக்கிகள் : தாவரத்தின் வளர்ச்சியை தடைசெய்யும் பொருட்கள்
உ.ம் : எத்திலீன், அப்சிசிக் அமிலம்.
02. முதன்முதலில் கண்டறியப்பட்ட தாவர ஹார்மோன் --- ஆக்சின்
03. செயற்கை ஆக்சின் --- நாப்தலீன் அசிட்டிக் அமிலம் **( NAA )**
04. இயற்கை ஆக்சின் -- இன்டோல் அசிட்டிக் அமிலம் **( IAA ),** பினைல் அசிட்டிக் அமிலம் **(PAA)**
05. இலை, கனி உதிர்தலை தடை செய்வது --- ஆக்சின்
06. நிலத்தில் உள்ள களைகளை நீக்க பயன்படும் செயற்கை ஆக்சின் -- 2,4 டைகுளோரோ .ஃபீனாக்ஸி அசிட்டிக் அமிலம்.
07. ஜிப்ரலினை கண்டறிந்தவர் ----- குருசோவா (ஜப்பான்)
08. நெல்லின் கணுவிடை பகுதி நீட்சி அடைவதால் ஏற்படும் நோய் -- பக்கானே, நெல்லின் கோமாளித்தன நோய்.
09. பக்கானே நோய்க்கு காரணம் -- ஜிப்ரல்லா .ஃபியூஜிகுராய் --- பூஞ்சை

10. செல் பிரிதலை தூண்டும் ஹார்மோன் -- சைட்டோகைனின்
11. சைட்டோகைனின் முதன்முதலில் மில்லர் மற்றும் ஸ்கூஜ் ஆல் ஹெர்ரின் மீனில் இருந்து எடுக்கப்பட்டது.
12. தாவரங்கள் முதுமையடையவதை தாமதப்படுத்துதல் -- ரிச்மாண்ட் லாங் விளைவு – காரணம் - சைட்டோகைனின்
13. தாவர வாயு ஹார்மோன் --- எத்திலீன்
14. கனி பழுத்தலுக்கு உதவும் ஹார்மோன் -- எத்திலீன்

## ஒளிக்காலத்துவம் மற்றும் குளிர்பதனம்:

01. ஒளிக்காலத்துவம் முதன்முதலில் கண்டறியப்பட்ட தாவரம் -- மேரிலேண்ட் மாமூத் ( புகையிலை )
02. நீள் பகல் தாவரத்திற்கு எடுத்துக்காட்டு --- கோதுமை, ஓட்ஸ்
03. குறும் பகல் தாவரத்திற்கு எடுத்துக்காட்டு --- புகையிலை, கிரைசாந்திமம்
04. நடுநிலை தாவரத்திற்கு எடுத்துக்காட்டு ---- சூரியகாந்தி, மக்காச்சோளம்
05. தாவரங்களில் மலர்தலை தூண்டும் பொருள் -- பைட்டோகுரோம்
06. பைட்டோகுரோம் எதனால் ஆனது --- பைலி புரதம்
07. பைட்டோகுரோமை கண்டறிந்தவர் --- பட்லர்
08. **Pr -- P660 --** குறும்பகல் தாவரத்தில் மலர்தலை தூண்டுகிறது
09. **Pfr --- P730 –** நீள்பகல் தாவரத்தில் மலர்தலை தூண்டுகிறது.
10. குளிர்பதனம் என்ற சொல்லை அறிமுகப்படுத்தியவர் -- **T.D.** லைசென்கோ
11. ஈராண்டு மற்றும் பல்லாண்டு தாவரங்களில்மலர்தல் எந்த வெப்பநிலையில்தூண்டப்படுகிறது **$1^0C – 10^0C$**

## மனித நல மேம்பாட்டில் உயிரியல் :

01. பூச்சி மற்றும் உவர் தன்மையை தாங்கக்கூடிய நெல் வகை -- அட்டாமிட்டா – 2
02. உயிரி உரங்கள் : பயிர் வளர்ச்சிக்கு பயன்படும் உயிரியிடமிருந்து தோன்றிய அனைத்து ஊட்டப் பொருளும் உயிரி உரம் எனப்படும்.
    உ.ம் : அனபீனா, காலோத்ரிக்கஸ், லிங்பயா, நாஸ்டாக், ஆசிலட்டோரியா
03. நைட்ரஜனை நிலைப்படுத்தும் பாக்டீரியங்கள் : அசட்டோபேக்டர், பாசில்லஸ், ரைசோபியம்
04. தழை உரம் அல்லது பசுமை உரம் : குரோட்டலேரியா ஜன்சியா, கிளைசின் மேக்ஸ்
05. வெற்றிகரமாக இந்திய வயல்களில் உயிரி உரமாக பயன்படுத்தப்படுவது -- அ. பின்னேட்டா

| தாவரம் | நோய் | காரணி |
|---|---|---|
| நெல் ( ஒரைசா சட்டைவா ) | வெப்பு நோய் | பைரிகுலேரியா ஒரைசா ( பூஞ்சை ) |
| நிலக்கடலை (அராக்கிஸ் ஹைபோஜியா | டிக்கா நோய் | செர்கோஸ்போரா பெர்சனேட்டா ( பூஞ்சை ) |
| எலுமிச்சை | கான்கர் நோய் | சாந்தோமோனாஸ் சிட்ரி ( பாக்டீரியா ) |
| நெல் | துங்ரோ நோய் | துங்ரோ (வைரஸ்) |

06. போபால் அவல நிலைக்கு காரணமான வேதிப்பொருள் : மீதைல் ஐசோ சயனேட் **( MIC )**
07. புற்று நோயை குணப்படுத்தும் பொருட்கள் உள்ள தாவரம் -- வின்கா ரோசியா (கேதரான்தஸ் ரோசியஸ்
08. அமெரிக்க நாட்டின் காப்புரிமை காலம் -- 17 ஆண்டுகள்
09. இந்திய நாட்டின் காப்புரிமை காலம் -- 5 ஆண்டுகள்
10. சர்க்கரையை போல் 100 மடங்கு இனிப்புள்ள புரதப் பொருள் ---- பிரேசின்
11. பிரேசின் எந்த தாவரத்திலிருந்து பெறப்படுகிறது -- பென்டாடைப்ளான்ட்ரா பிரேசியானா
12. தேநீருக்கு பதிலாக பயன்படுத்தப்படும் தாவர இலை -- ஐலக்ஸ் பராகுவென்சிஸ்
13. காப்பிக்கு மாற்றாக பயன்படும் விதை -- கோலா நிட்டிடா
14. உலகில் காணப்படும் மருத்துவ தாவரங்களின் எண்ணிக்கை -- சுமார் 70,000

| மருத்துவ தாவரம் | மருந்து பொருட்கள் | சிகிச்சை |
|---|---|---|
| பப்பாவர் சாம்னி.ஃ.பெரம் | மார்.ஃ.பின் | அதிவலிமைமிக்க வலி மருந்து |
| சின்கோனா காலிசாயா<br>சின்கோனா அ.ஃ.பிசினாலிஸ் | குயினைன் | மலேரியா காய்ச்சலுக்கு மருந்து |
| டிஜிடாலிஸ் | டிஜாக்ஸின் | இதய நோய் சிகிச்சைக்கு மருந்து |
| எபிட்ரா சைனிகா | எ.ஃ.பிட்ரின் | இருமலை நீக்கும் மருந்து |
| பனாக்ஸ் ஜின்செங் | ஜின்செங் | மன மற்றும் உடல் இறுக்கத்திலிருந்து விடுபட |

| அறிவியல் மற்றும் வட்டார பெயர் | வேதிப்பொருள்கள் | சிகிச்சை |
|---|---|---|
| அகாலிபா இண்டிகா<br>குப்பை மேனி | அகாலி.ஃ.பைன்<br>ட்ரைஅசிடோநியாமின் | தோல்வியாதி, கீல்வாதம் மற்றும் மூட்டு வீக்கம் |

| | | |
|---|---|---|
| பூனை மயக்கி | | |
| ஏகில் மார்மிலாஸ்<br>வில்வம் அல்லது பேயர்கனி | மார்மிலோசின், கூமாரின்<br>ட்ரைடெர்பினாய்டுகள் | வயிற்றுப்போக்கு, சீதபேதி, |
| சிசஸ் குவாட்ராங்குலாரிஸ்<br>பிரண்டை<br>ஹாட்சர் - எலும்பு இணைவி | பிரசீன்<br>டெட்ராசைக்ளிக்<br>ட்ரைடெர்பினாய்டுகள் | எலும்பு முறிவை இணைக்க<br>ஆஸ்த்துமா, வயிறு தொடர்பான<br>பிரச்சனைகள்<br>மூலம். |
| மைமோசா பூடிகா<br>தொட்டால் சிணுங்கி | மைமோசின் | காசநோய், வயிற்றுப்போக்கு<br>மூல நோய், தோல் நோய் |
| சொலானம் நைக்ரம்<br>மணத்தக்காளி<br>மணி தக்காளி<br>பிளாக்நைட்ஷேட் | சொலானின்கள்<br>சபோனின் | கல்லீரல் சிர்ரோசிஸ்,<br>சீதபேதி,<br>சிறுநீர் போக்கை ஊக்குவிக்கிறது. |

15. ஜப்பானில் அரிசியை நொதிக்க செய்து தயாரிக்கும் ஒரு வகை மதுபானம் -- சாகே
16. தேக்கின் அறிவியல் பெயர் --- டெக்கோனா கிராண்டிஸ்
17. உண்ணத்தக்க தடுப்பூசி கொண்டதாக உருவாக்கப்பட்ட தாவரம் -- உருளை கிழங்கு
18. நி∴ப் ஜீன் எனப்படுவது -- நைட்ரஜனை நிலைப்படுத்தும் ஜீன்
19. போர்டாக்ஸ் கலவையில் உள்ள பொருட்கள் -- தாமிர சல்பேட், சுண்ணாம்பு, நீர்.

( தாவரவியல் ) அறிவியல் பிரிவு.

∴பேபேசி :

01. தக்கை தாவரம் என அழைக்கப்படுவது --- ஆஸ்கினோமினி ஆஸ்பிரா
02. வேர் முண்டுகளில் நைட்ரஜனை நிலைநிறுத்தும் தாவரம் - ரைசோபியம் லெகுமினோசாரம்
03. கொடி அல்லியின் மறுபெயர் -- வெக்ஸில்லம்
04. இருமட்ட ஈருவ மகரந்த தாள் காணப்படும் தாவரம் -- குரோட்டலேரியா வெருகோஸா
05. சூற்பைகாம்பு ஆக்குதிசுவாக மாற்றம்அடைந்து சூற்பை மண்ணுக்குள் வளரும்தாவரம் -- அ.ஹைபோஜியா
06. பல்வைனஸ் அல்லது அதைப்பு காணப்படும் தாவரம் -- கி. டெர்னேசியா
07. காட்டு தீ எனப்படுவது --- பியூட்டியா பிரான்டோசா
08. ∴பேபேசி குடும்ப தாவரத்தின் சூல் ஒட்டும் முறை --- விளிம்பு சூல் ஒட்டும்முறை
09. ∴பேபேசி குடும்ப தாவரத்தின் கனி --- லெக்யூம்
10. ஆஸ்கினோமினி ஆஸ்பிரா ஒரு --- நீர் தாவரம்
11. பொங்கேமியா கிளாப்புரா ஒரு --- மரம்

ரூபியேசி :

01. அல்லி ஒத்த புல்லி இதழ் காணப்படும் தாவரம் --- மியூஸாண்டா
02. கா∴பியில் உள்ள ஆல்கலாய்டு --- கா∴பின்
03. சின்கோனா அ∴பிசினாலிஸ் தாவரத்திலிருந்து பெறப்படும் மருந்து --- குயினைன்

**ஆர். ராஜாராம், முதுகலை ஆசிரியர், அரசு மேல்நிலைப்பள்ளி, வீரசோழன்**